**விருந்தாளி**

காணும் நண்பர்கள்,
உறவினர்,
அக்கம் பக்கத்து
வீட்டாரின்
விசாரிப்புகள்.
உடல் நலம்
தொடங்கி
வேலை பற்றிய
விசாரிப்புகளில்
விரிந்து
எல்லோரிடமும்
பூக்கும்
ஓர் கேள்வி
"எப்போ போறீங்க" .
நான் பிறந்த
என் ஊரில்,
என் வீட்டில்,
இன்னும் சில
ஆண்டுகள் வரை
விருந்தாளி
நான்.